ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

கூர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 23 புதன்கிழமை (08-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily பதிப் 284

அரசின் நிலைப்பாட்டை மாற்ற

தமிழரின் உறுதி நீடிக்க வேண்டும்

அதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு

தொண்டமான் சொல்கிறார்

கொழும்பு, செப்டெம்பர் 8

போராட்டத்தில் தமிழ் மக்களின் உறுதிப்பாடு நீடிப்பதன் மூலமே அரசின் நிலைப்பாட்டை மாற்றலாம். தமிழரின் உறுதிப் பாட்டை குலைக்க முடியாது என்ற நிலைக்கு அரசாங்கம் தள்ளப் படவேண்டும். அத்துடன் தாம் எவ்வளவு தான் உபத்திரவம் கொடுத் தாலும் தமிழ் மக்கள் அதற்கு ஈடுகொடுத்து நிற்கின்றனர் என்று அரசாங்கமும் இராணுவமும் உணர்வதன் மூலமே இனப்பிரச்சி னைக்கு முடிவு வரும்

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமைச்சர் திரு. எஸ். தொண்ட மான்.

கொழும்பு தமிழ் வார இதழுக்கு அளித்த செவ்வியில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் தொண்டமான் அண்மையில் ஐரோப்பிய நாடு களுக்குச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டதும், அப்போது பாரிஸில் விடுத லைப் புலிகள் பிரமுகரைச் சந்தித்துப் பேசியதும் தெரிந்த வையே.

அந்தப் பின்னணியில் கொழும்பில் இருந்து வெளி வரும் பத்திரிகைகள் அவரைச் செவ்வி கண்டிருக்கின்றன.

தமிழ் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் அவர் தெரிவித்திருக்கும் கருத்துக் களில் ஒரு பகுதி வருமாறு:-

கேள்வி:- யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வது அல் லது பொருளாதாரத் தடை யின் ஒரு பகுதியையாவது நீக் குவது. கைதிகளை விடுதலை செய்வது போன்றவைகள் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு:

தகர்க்கப்பட்ட படகுகளுக்கு பதிலாக 3 புதிய படகுகள்

யாழ்ப்பாணம், செப். 8

கடந்த மாதம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட ஸ்ரீலங்கா கடற்படையின் 8 படகுகளுக்குப் பதிலாக மேலும் 3 வேகத் தாக்குதல் படகுகளை கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக் கைகளை எடுத்துள்ளது.

இப்படகுகள் அடுத்த சில வாரங்களில் கொழும்புக்கு வந்து சேரும் என்று தெரிக் கப்படுகிறது.

பிரான்ஸில் தயாரிக்கப் பட்ட இப்படகுகள் வேகம் கூடியவையும் கடற் தாக்குத லுக்குப் பயன்படக் கூடிய வையுமாகும் என்றும் கூறப் படுகிறது.

இதேவேளை—

கொழும்பில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இதே மாதிரியான தொழில் நுட்பத் தைக் கொண்ட மேலும் சில படகுகள் தயாரிக்கப்பட்டு கடற்படைக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது;

இதனிடையே—

விடுதலைப் புலிகளின் தாக் குதல்களை அடுத்து ஸ்ரீலங்கா கடற்படையைப் பலப்படுத்த வேண்டும் என்று மாதுளாப்பு

(5 ஆம் பக்கம் பார்க்க)

10 ஹெலிக்கொப்டர்களுடன் மின்னல் வேக தாக்குதல் பிரிவு

புலிகளின் அதிரடியை சமாளிக்கத் தேவையாம்

கொழும்பு, செப். 8

புலிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க விமானப்படையின் எம். ஐ. ஹெலிக்கொப்டர் களைக் கொண்ட மின்னல் வேக தாக்குதல் பிரிவு ஒன்று இருக்க வேண்டும் என்று இராணுவ பகுப்பாய்வாளர் கள் அபிப்பிராயம் தெரிவித் துள்ளனர்.

ஒவ்வொரு ஹெலிக்கொப் டரிலும் சக்தி வாய்ந்த ஆயு தங்களுடன் கூடிய 25 கோமாண்டோக்கள் செல்லக் கூடியதாக — துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட நிலையில்— 8 முதல் 10 ஹெலிக்கொப் டர்கள் — இருக்க வேண்டும்.

யுத்த முனைக்கு சில நிமி டங்களில் சென்று இறங்கக் கூடியதாக இந்த கோமாண் டோப்படை தயார் நிலையி லும் இருக்க வேண்டும்.

இப்படி ஒரு படை இருக் கும் பட்சத்தில் மண்டியிட் டவைத் தாக்குதலை நடத்தி விட்டு வாபஸ் வாங்கிய விடு தலைப் புலிகளைப் பிடித்தி ருக்கலாம் என்றும் இராணு வப் பகுப்பாய்வாளர்கள் கரு துவதாக 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

(உ-எ)

கிளாலி, ஆலங்கேணி பகுதியில் திங்கள் இரவு விமானத் தாக்கு

படகோட்டி பலி; மற்றொருவர் காயம்

தென்மராட்சி, செப். 8

நேற்று முன்தினம் இரவு கிளாலி மற்றும் ஆலங்கேணிப் பகுதிகளில் ஸ்ரீலங்கா விமா னப்படையின் ஹெலிக்கொப் டர்கள், புக்காரா ஆகியவை நடத்திய தாக்குதல்களில் மகு தங்கேணியைச் சேர்ந்த படகோட்டி ஒருவர் உயிரிழந் தார். துணைப் படகோட்டி ஒருவர் காயமடைந்தார்.

கிளாலிக் கடலில் விமானப் படை ஹெலிகள் நடத்திய தாக்குதலில் இருவர் உயிரி ழந்தனர் என்று நேரில் பார்த் தவர்கள் தெரிவித்ததாக 'வெரிடாஸ்' வானொலி அறிவித்தது.

இச்சம்பவத்தில் மூன்று படகுகள் முழுமையாகவும் 'வெரி டாஸ்' தெரிவித்தது.

விமானப்படைத் தாக்குத லில் காயமுற்ற — நாவற்கோ யில் இழக்கைச் சேர்ந்த — க. சண்முகநாதன் (வயது 41) என்ற துணைப் படகோட்டி யாழ். ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டார்.

இரவு 7.45 மணிக்கு ஹெலி கொப்டர் கிளாலி, அக்கிலிப் பவைப் பகுதிகளை பலதடவை கள் வட்டமிட்ட பின்னர் நடுக்கடலில் பயணிகளுடன் சென்ற படகுகளை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றது.

பின்னர் இரவு 8.30 மணிக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்கா அரசின்

கடல் தடைச் சட்ட அறிவிப்பு இந்தியா தீவிர பரிசீலனை

இலங்கையின் வடக்கு கடல் எல்லையில் படகுகள் செல்லக் கூடாது என அரசு பிறப்பித் துள்ள அவசரச் சட்டம் பற்றி இந்திய மத்திய அரசு தீவிர மாகப் பரிசீலித்து வருகிறது.

இந்தச் சம்பவம் இந்திய மீன வர்களுக்கு கச்சதீவு ஒப்பந்தத் தின் கீழ் பரம்பரையாக அளிக் கப்பட்டு வரும் மீன் பிடிக்கும் உரிமையைப் பாதிக்கின்றதா என்பது பற்றி மத்திய அரசு பரிசீலிக்கும் என்று புதுடில்லி யில் அதிகாரிகள் தெரிவித் தனர்.

சர்வதேச கடல் எல்லை ஒப்பந்தத்தின் அடிப்படை யிலும் இந்தச் சட்டம் பரிசீலிக் கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்திய அரசுடன் கலந்து பேசிய பின்னரே இந்த அவச ரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட தாக சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை அவர் கள் மறுத்தனர். (த-5)

பருத்தித்துறைக் கடலில் படையினர் பீரங்கித் தாக்கு!

யாழ்ப்பாணம், செப். 8

பருத்தித்துறை கடற்பிராந் தியத்தில் ரோந்தில் ஈடுபட்டி ருந்த கடற்படையினர் நேற்று அதிகாலை 3 மணிக்கு—முன் றாவது நாளாக — பொலி கண்டி, வல்வெட்டித்துறை கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் களை மேற்கொண்டனர்.

வடபிராந்தியக் கடற்பரப் பில் படகுகள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்ட நாளில் இருந்து தொடர்ச்சியாக இத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இரவு பகல் விடாது அடிக் கடி கரையோரப் பகுதிகளில் ஹெலிகொப்டர்கள், போம் மர்கள் பறந்து திரிவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

(உ-15-173)

வீரப்பன் கும்பலில் விடுதலைப் புலிகள்?

சவானின் சந்தேகம் இது!

பெங்களூர், செப். 7

விடுதலைப் புலிகள் கர்நா டக மாநிலத்தில் ஊடுருவி இருப்பது சாத்தியமே. சந்தன மரக் கடத்தல்காரன் வீரப் பன் குப்பலிலும் விடுதலைப் புலிகள் சேர்ந்து இருக்கக் கூடும்.

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் பெங்களூரில் செய்தியாளர் மத்தியில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகளில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள விடுதலைப்புலி கள் முயற்சித்து வருவதாக வும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் நட வடிக்கைகளைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கும் படி தமிழக அரசுக்கு மத்திய அரசு கடிதம் எழுதியிருப்ப தாகவும் —

இந்தியத் தமிழருக்கும், இலங்கைத் தமிழ் அகதிகளுக் கும் விரோதம் கண்டுபிடிப் பது கஷ்டமான காரியம் என் றும் — அவர் தெரிவித்தார்.

நாட்டில் விடுதலைப் புலி களின் நடவடிக்கைகள் பரவி வருவது குறித்து மத்திய அரசு கவலைப்படுவதாகவும் அவர் கூறினார். (இ-எ)

புலிகளின் செயற்பாடு ஏதும் தமிழகத்தில் இல்லை

ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, செப் 8

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற் பாடுகள் எதுவும் இல்லை

முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய உள்துறை அமைச் சரின் குற்றச்சாட்டுக்குப் பதி லளிக்குமுகமாக வெளியிட்ட அறிக்கையில் முன்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் கர் நாடக மாநிலத்தினுள் ஊடு ருவியிருப்பதாகவும், சந்தன மரக் கடத்தல்காரன் வீரப் பன் கும்பலுடன் சேர்ந்திருப்ப தாகவும் மத்திய அமைச்சர் சவான் எழுப்பியுள்ள ஐயம் தவறானது என்றும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகள் நாட்டிற் குள் ஊடுருவல் செய்வதைக் கண்காணிப்பதில் இந்திய கடற்படைக்கும் முக்கிய பங்கு உண்டு என்று தெரிவித்த முதலமைச்சர் —

தமிழ் நாட்டில் பாதுகாப்பு (5 ஆம் பக்கம் பார்க்க)

ஏழாலையில் ஒருவர் காயம்

கட்டுவன் இராணுவ முகா மில் இருந்து மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஏழாலை வடக்கில் ஒருவர் காயமடைந்தார். இச் சம்பவம் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

வீட்டின் மேல் ஏறியிருந்து ஓலை வேய்ந்து கொண்டிருந் தவர்களில் ஒருவரான குரு நாதி சிவபாக்கியநாதன் (வயது 41- ஏழாலை வடக்கு) என்பவரே காயமடைந்தவரா வார். இவர் யாழ் ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டுள் ளார். (உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IN MEMORIUM

MARY NAVAMANI ARIARATNAM

(Death occured on 01–07–1993)

Wife of Late Joseph Stephen Danforth Ariaratnam. J P, M. B. E.
(Retired Bank Manager)

Beloved Mother of Balachandran And Late Mrs. Mahimawathie Rajadurai (Nee Ariaratnam Danforth)

Ariaratnam Balachandran,

DUTCH ROAD,
UDUVIL. (6644)

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

ரஜனி • பல்லவி • ஹரிகரன்
✻ வள்ளி ✻
பிரவு • குஷ்பு • செந்தில்
✻ மறவன் ✻
மம்முட்டி • ஊர்வசி • ரகுவரன்
✻ தேவர்சாம்ராஜ்யம் ✻
ராம்கி • பேபிஷாலினி
✻ தங்கபாப்பா ✻

(அனைத்தும் ORIGINAL பிரதிகள்)

குணம் வீடியோ சென்ரர்

43, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

★ இந்த 4 படங்களின் MASTER COPY எங்களிடம் மட்டும்தான் இருக்கிறது.

(சி/6070)

கோட்டையம்பதி

ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான் தேவஸ்தானம்

✿ ஸ்ரீ கிருஸ்ண ஜெயந்தி விழா ✿

இன்று 08-9-1993 புதன்கிழமை காலை 10 மணிக்கு கன்னாதிட்டி. விதுபதி - சின்ராசாவினால் புதிதாக செய்யப்பட்ட சந்தான கோபாலருக்கும், மூலமூர்த்திக்கும் அபிஷேக ஆராதனை நடைபெறும்.

மாலை 6.30 மணிக்கு பெருமானுக்கு விஷேட பூஜை நடைபெற்று வீதியுலா வரும் காட்சியும் நடைபெறும் அடியார்கள் அனைவரும் பங்குபற்றும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

இரவு 8-00 மணி தொடக்கம் 9-00 மணி வரை

"திருமால் பெருமை"

என்னும் பொருள் பற்றி
திரு. ஆர். திருமுருகன்
சொற்பொழிவாற்றுவார்

இரவு 9.00 மணிமுதல் 12 00 மணி வரை

ஈழத்தின் பிரபல நாதஸ்வர தவில் மேதைகள் ஒரே மேடையில் தோன்றி இசை முழங்கவுள்ளனர்.

திரு. T. மகேந்திரன் குழுவினர்
(தேவஸ்தானம்)
தவில் சுடரொளிகள்
திரு. K. நித்தியானந்தன்
தவில் மேதை தட்சணாமூர்த்தியின் புதல்வன்
திரு. T. உதயசங்கர்
தவில் மேதை N. R. சின்ராசாவின் புதல்வர்கள்
திரு. N. R. S. ரவீந்திரன்
திரு. N. R. S. சுதாகரன்

நாதஸ்வர மேதைகள்

சுரஞானஜோதி திரு. க. சிவதாஸ்
நாதஸ்வர வித்துவான், நாதஸ்வரகலாநிதி
திரு. N. K. பத்மநாதன்
மதுரகான இசைமணி, இன்குழல் வேந்தன்
திரு. S. S. சிதம்பரநாதன்
நாதஸ்வர இரட்டையர்கள், நாதஸ்வர இசைமணிகள்
திரு. V. K. கானமூர்த்தி
திரு. V. K. பஞ்சமூர்த்தி

இரவு 12 மணி தொடக்கம்

சாந்தன் குழுவினரின் இன்னிசை விருந்து

நடைபெறும்

ஒலி, ஒளி அமைப்பு:- மனோன்மணி சவுண்ட் தீவகம்

இங்ஙனம்
— விழா உபயகாரர்

இலுப்பை வீதி,
வல்.வடமேற்கு. (சி/5890)

கிருஷ்ண ஜெயந்தி

சுன்னாகம் மயிலணி அருள்மிகு சந்தசுவாமி கோவிலில் இன்று புரட்டாதி மாவலி கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறும். (த-89)

○ ○ ○

உரும்பராய் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா இன்று புதன் காலை நாம சங்கீர்த்தனம், பாதபூஜை, இலட்சார்ச்சனை, விசேட பஜனை ஆகியவற்றுடன் நடைபெறும். (த-89)

○ ○ ○

சுன்னாகம் மயிலணி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலையத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கிருஷ்ண ஜெயந்தி விழா விசேட பஜனையுடன் நடைபெறும். (த-89)

இன்று

யாழ் கோட்டை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகத்தினர் மற்றும் மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் கூட்டத்தில் கருத்துரை வழங்குவர். (த-30)

○ ○ ○

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியில் குடும்ப நல சேவையாளரின் பற்றாக்குறையை நீக்கும் முகமாக தேசிய பயிலுநர் சபையுடன் இணைந்து மாநகரசபை ஏற்பாடு செய்துள்ள குடும்ப நல உதவியாளர் பயிற்சி நெறி இன்று புதன்கிழமை ஆரம்பமாகும்.

நாளை

வலி. தெற்கு மாதாந்த சுகாதாரக் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தர் வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறும். (த-68)

○ ○ ○

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சிக் கோட்ட பொதுஜன ஸ்தாபனங்களின் பொதுக் கூட்டம் நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி இளம்பரிதி அறிவித்துள்ளார். (த)

சிறைக்காவலர் தாக்கப்பட்டனர்

சென்னை, செப். 8

ராஜீவ் காந்தி கொலை வழக்கு எதிரிகளில் சிலர் தாம் சிறை வைக்கப்பட்டுள்ள பூந்தமல்லிச் சிறையின் காவலர்கள் இருவரைத் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

காயமடைந்த காவலர்களில் ஒருவர் சென்னை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

NEW SCIENCE ACADEMY
JAFFNA
94 A/L
PAPER CLASS
ZOOLOGY
By
திரு. ஞானேந்திரன்
Dip. Sce
ஆரம்பம்: 9-09-93
Thu. 3.00 — 5 00

BECON
STANLEY ROAD,
JAFFNA.
அளவையியல்
S. S. மனோகரன்
மீட்டல், வினா-விடை வகுப்பு
சனி, ஞாயிறு 9—10 a m.
ஆரம்பம்:
10-9-1993
காலை 9 மணி.
✶ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-6060)

இரத்ததானம் உயிர் காக்கும்
உயிர் காக்க
சஞ்சீவி
18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

இராமநாதன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடாத்தும்
கலைவிழா
பிற்போடப்பட்டுள்ளது

1993-09-10, 1993-09-11 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த "கலைநிழற்சி" தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றோம்.

நடைபெறும் தினங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

குகானந்தநாயகி அப்புத்துரை
செயலாளர்

(சி / 2028)

B. A. Part - I
B. Com. Part - I

யாழ். பல்கலைக்கழகம்
வெளிவாரி விரிவுரைகள்
ஆரம்பமாகிவிட்டன

G.A.Q. விரிவுரைகளும்
1st in Com ஆரம்பமாகிவிட்டன

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-6062)

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவு சங்கம், பளை.

பயிலுநர் கிளை முகாமையாளர்
விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமைகள் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயது
   18—45 வருடங்கள்
2. கல்வித்தகைமை.
   க. பொ. த. (சாதாரணம்) தமிழ்மொழி, எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
3. சிறந்த நற்குண, நற்பண்புகள் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:
சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் "பொது முகாமையாளர், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை" என்ற முகவரிக்கு 20-09-93 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தில் இடதுபக்க மேலுறையில் "பயிலுநர் கிளை முகாமையாளர் விண்ணப்பம்" என்று குறிப்பிடல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்.
2-9-93 பளை. (சி/6892)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 04 — 02 — 1938

மறைவு: 09 — 08 — 1993

அமரர்
சுப்பிரமணியம் நடராசா

மாதம் ஒன்றானாலும் ஆறாத நெஞ்சமது ஆறாத் துயரிலிலே அனைவரையும் மூழ்கவிட்டீர்.

இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (27218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 01 — 1933

மறைவு: 20 — 08 — 1992

திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்

(வண்ணார்பண்ணை)

திதி: 08 09 93
ஆவணி திங்கள் தேய்பிறை சப்தமி

அன்புனத்தால் புன்னகையால்
அமுதனைய இன் சொல்லால்
நன்மனையின் தெய்வமென
நாம் மகிழ உடனிருந்தாய்!
பின்னரெமைப் பிரிந்திட்டாய்!
விடுற்றாய், ஆனாலும்
உன் நினைவால் எம்முள்ளம்
உருகிறதே! நாளெல்லாம்.

கணவன், மக்கள்.

411, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5889)

பாரதி
சித்தன்கேணி
SPOKEN ENGLISH
By
Mr. BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
9-9-1993
வியாழன் காலை 10-30
(சி-6063)

விக்னா கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 94
வினா - விடை
சனி, ஞாயிறு
வகுப்புகள்

பொருளியல் — க. கனகரன் 12 - 1
வர்த்தகம் — தேவா 10 - 11
கணக்கியல் — S. K. பிரபாகரன் 8.00 - 3.30

★ ஆரம்பமாகிவிட்டன ★

(சி-6061)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

93 O/L

சனி, ஞாயிறு, மகல், மாலை நேர வகுப்புகளுக்கான

PAPER CLASS
(வினா-விடை வகுப்புக்கள்)

திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு:

விஞ்ஞானம்	...	திரு. J R. சூரி
கணிதம்	...	திரு. ஜெகன்
சமூகக்கல்வியும் வரலாறும்	...	திரு. கோபி
ஆங்கிலம்	...	திரு. விஸ்வநாதன்
தமிழ்	...	திரு. சிவா, திருப்பதி
வர்த்தகம்	...	திரு. கருணாகரன்
இந்துசமயம்	...	திரு. கெங்கா, சங்கர்

ஆரம்பம்: 11 — 09 — 1993
சனி காலை 9மணி

- ஆண்டு - 9, 10, 11 பாடத்திட்டங்கள் உள்ளடங்களாக மீட்டப்படும்.
- விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்.

(சி-6040

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 15 — 12 — 1915

மறைவு: 08 — 09 — 1990

அமரர் அ. அ. பேதுருப்பிள்ளை

(வியாபாரியார் அவர்கள் — மயிலிட்டி)

"யேசுவின் ஒன்றிப்பில் இறந்தோரைக்
கடவுள் அவருடன் அழைத்து வருவார்" (தொ 4/14)

இளைய மகன் பிறந்து ஏழாம் நாள் இழந்து விட்டோம் நாளை
நாளை இழந்து தனித்து நின்று எம்மையெல்லாம்
தாயினும் மேலாய் நின்று தாங்கியே வளர்த்தீர் ஐயா
மக்கள் எல்லோர்க்கும் நல்ல மணமான வாழ்வு [illegible]
இளையமகன் மணக் கோலம் இனிதேறவில்லை வென்று
இதயம் மிக நொந்து நீர் நோயிலே வாடி நிற்க
நாட்டிலிலே நேர்ந்த நலமற்ற சூழலினால்
மயிலிட்டிப் பதியை விட்டு மக்களெல்லாம் இடம் பெயர்ந்து
தம்பகிட்டி மண்ணில் நாம் தனித்திருந்த வேளையிலே
இளைய மகன் திருமணத்தை இனிதே நீர் கண்டு விட்டீர்
கண்டு விட்ட நீரும் கனநாளில் இவ்வுலகில்
வாழாமல் வானுலகை வாரி அணைத்து விட்டீர்
குண்டு விமானங்கள் குண்டு மழை பொழிய
உலங்கு வானூர்திகளின் உறுமல் அதிரிக்க
ஆடம்பரமின்றி அமைதியாய் உன்னுடலை
நின்ன மருமகனின் சீரிடமாம் சக்கோட்டை
மண்ணில் புதைத்து மனம் மிகவே வாடி நின்றோம்
உங்கள் மக்கள் எல்லாம் ஒன்றாகக் கூடியே
ஒரிடமாயிருந்திடும் நாள் கிட்டிடுமோ ஐயா
இறைவன் திருவடியில் உங்கள் ஆன்மா
இன்புடனே என்றென்றும் வாழும் ஐயா!

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிள்ளைகள்	மருமக்கள்
தேவதிரவியம் (மகன்) (உரிமையாளர், குணம் கிறீம் ஹவுஸ் சுன்னாகம்)	குணசீலி (மருமகள்) (வல்வெட்டித்துறை)
சிறில் (மகன் நோர்வே)	பேபி (மருமகள் நோர்வே)
செல்வராணி (மகள்) (தெகிவளை)	ஞானப்பிரகாசம் (தெகிவளை முன்னாள் பிரபல வர்த்தகர்)
செல்வரத்தினம் (மகள்) (நீர்கொழும்பு)	மரியநாயகம் (மருமகன்) (முன்னாள் வர்த்தகரும் முல்லைத்தீவு மாவட்ட சமாதான தலைவரும்)
செல்வமலர் (மகள் மானிப்பாய்)	பொனிப்பாஸ் (மருமகன் (ஓய்வு பெற்ற கிறைச்சாலை உத்தியோகத்தர்)
செல்வன் (மகன் (ஹொலண்ட்)	யோன் மேரி (மருமகள் ஹொலண்ட்)
பற்றாக் (மகன் கனடா)	ஜோன் (மருமகன் கனடா)

(சி-6067)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால்
நடத்தப்படும்
ஒன்பது மாத கால
விவசாயப் பயிற்சி நெறி - 1993/94

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயத்துறையில் ஒன்பது மாத காலப் பயிற்சிநெறி அளிப்பதற்காகத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. விண்ணப்பதாரர் க. பொ. த. (சா/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. க. பொ. த. (உ/த) பரீட்சையில் இரசாயனவியல், தாவரவியல் பாடங்களில் சித்தி பெற்றிருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 06 — 09 — 1993

அனுப்ப வேண்டிய முகவரி:

தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
மாவட்டச் செயலகம், கோண்டாவில்.

★ விண்ணப்பப் படிவங்கள் கீழ்வரும் மாதிரிப் படிவ முறையில் தயாரித்து அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு:

1. மேற்படி பயிற்சி நெறிகளைக் கற்று முடிப்பதற்கான செலவுகளும், உணவும் இலவசம்.
2. விண்ணப்பதாரிகள் அனைவரும் எதிர்வரும் 17 - 09 - 1993 காலை 9.00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தவறாது சமுகமளித்தல் வேண்டும். தவிப்பட்ட அழைப்புகள் அனுப்பி வைக்கப்பட மாட்டா.

மாதிரி விண்ணப்பப் படிவம்

01. முழுப் பெயர்:- .....
02. நிரந்தர முகவரி:- .....
03. தற்போதைய முகவரி:- .....
04. பிறந்த திகதி:- .....
    வயது:- .....
05. கல்வித் தகைமை:- .....
06. விவசாய அனுபவங்கள்:- .....
07. தந்தையின் முழுப்பெயர்:- .....
    தந்தையின் முகவரி:- .....
    தந்தையின் தொழில்:- .....
08. குடும்ப மாத வருமானம்:- .....
09. வேறு தகைமைகள்:- .....

மேற் கூறிய தகவல்கள் யாவும் சரியானவையெனவும், உண்மையானவையெனவும், பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து பயிற்சி முடியும் வரை தொடர்ந்து பங்கு பற்றுவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

திகதி:- .....

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-5891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

G.C.E. A/L க. பொ. த. உயர்தரம் தமிழ் மாதிரி வினா-விடை பகுதி I—II உள்ளடங்கியது. திரு. காரை க. செல்வராசா. விற்பனை யாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. (சி-6053)

நல்ல இன வளர்ப்பு முயல் குட்டிகளும், புறாக்களும், ஒரு சில பெண்டம் வெள்ளடியன், யாமான் கோழிகளும், குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. எம். பாக்கியநாதன், சாந்தன் வீதி, கோண்டாவில் கிழக்கு. (27210)

கோழிக்கூடு

ஒப்டால் வேய்ந்த கோழிக் கூடு முழுமையாக விற்பனைக் குண்டு. காலை 9 மணிக்கு முன்பும், பிற்பகல் 1 மணி முதல் 4 மணி வரையும் எல்லா நாட்களிலும் பார்வை யிடலாம். இல. 1219,665), கே. கே. எஸ். வீதி, பூநாறி மரத்தடி யாழ்ப்பாணம். (27213)

வீடு விற்பனைக்கு

8½ பரப்புடன் கூடிய இரட்டை வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 7 படுக்கை அறைகள், 3 கழிவறைகள், 3 சமையலறைகள், 3 குளியலறைகளும், விசாலமான பக்கணியையும் கொண்டது. தனியாகவோ இருவர் சேர்ந்தோ வாங்கலாம். அலுவலகங்கள், நிலைக்கலைகள் நடத்தவும் ஏற்றது. அமைதியான சுற்றாடலில் உள்ளது. க. புவனம், 99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (6466)

இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8-00—10-30 வரை கத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் விடியோ சென்டர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27169)

கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம்.

A/L 94

துரித மீட்டலும் வினா விடையும்

வர்த்தகம்:

திரு. இ. இரவீந்திரன்

ஆரம்பம்:

11 — 09 — 1993

காலை 7-00 மணி

நேர அட்டவணை

சனி	ஞாயிறு
7 — 9	7 — 9

குறிப்பு:
I) பாடத்திட்டம் முடிக்கப்படும்.
II) வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் நடைபெறும். (சி-6046)

NEW ENGLISH ACADEMY

ஆரியகுளம், யாழ்.

★ G. C. E (O/L) (English)

துரித மீட்டலுடன் வினா - விடை வகுப்புகள்

★ Spoken English (with Grammar)

புதிய பிரிவு:

9 - 9 - 1993 - வியாழன் காலை 8-30 மணி

By

R. SIVALINGAM

(Dip - in - Eng.)

குறிப்பு:
மாணவர்களின் வசதிக்கேற்ப அட்டவணை வகுக்கப்படும். (சி-6064)

NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக யாழ்நகர்.

O/L விஞ்ஞானம்

கடந்த கால வினாப்பத்திரங்களுடன் கூடிய துரித மீட்டல், வினா விடை வகுப்புகள்

ஆசிரியர்: தி. தவச்செல்வன்

ஆரம்பம்: 11 — 09 — 1993 சனி பி ப. 5-00 மணி

குறிப்பு: நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (சி-6893)

கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்கள் புனரமைப்பு

கிளிநொச்சிப் பகுதியிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினரால் புதுக்குளம் என்றழைக்கப்படும் கனகபுரம் குளம், இராமநாதபுரம் குளம் ஆகிய வற்றின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் கனகபுரம் குளம் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் இராமநாதபுர குள வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் கனகபுரம்குளம் மறுசீரமைக்கப்பட்டுள்ளமை இக்கிராமவாசிகளுக்கு பெரும் நன்மை பயப்பதாகவே அமைந்துள்ளது.

45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கதிர்காமர் சிவபாதசுந்தரம்

(Retired, Clerk - A. G A's Office Tellippalai)

தோற்றம்: 3 — 7 — 1930 மறைவு: 26 — 7 — 1993

மண்ணில் பிறந்திடினும் மறு ஏழுபிறப்பினும்-
பெற்றுயரா
கண்ணியமாய் பெற்றுயர்ந்த கலைகளுக்கு-
மகுடமதாய்
மறை வழுவாத் திருக்குறளுக் கருளோடு-
பொருளுணர்ந்து
கல்லாதார் நலையாட கற்றார்கண்டு காமுறுவர்
பெற்ற துணையும் பேறு பதினாறும் பெற்றுயர்ந்த
உற்ற பொலிவுக் கீடிங்குனக்கில்லை யவ்றோர்
மனைபார்த்து மீண்டேக துணையேற்ற (தெல்லி)
நகரேக
மனுமுகம் காணப்படை குறிதப்பா வின்னேகி
மாலைப்பதி மால்முருகன் சேவடிதான் சேர்ந்திடவே
மாமயிலோன் தாழ்போற்றி போற்றியென்
றேற்றுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

துரையப்பா வீதி.
தெல்லிப்பழை.
1993-9-8. (27208)

41ஆம் நாள் நினைவஞ்சலி

தற்பரானந்தன் முகுந்தன்

-யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்-

(தெல்லிப்பளையிலிருந்து இடம்பெயர்ந்த யூனியன் கல்லூரி முன்னாள் மாணவன்)

பிறப்பு: 11 — 08 — 1973 அழைப்பு: 30 — 07 — 1993

வீட்டுக் கிருத்தியம்: 12 — 09 — 1993

தலைமகனே முகுந்தா!
ஊர்விட்டு ஊர்சென்று பள்ளிவிட்டுப் பள்ளி சென்றாய்
பல கலைகள் பயின்று நீயும் பணிகள் பல புரிந்துநின்றாய்
பாசத்தைப் பரப்பி நீயும் பண்புடனே பழகி நின்றாய்
முந்திப் பிறந்த பிள்ளை முழுமதியாய் வளர்ந்து நீயும்
ஒளிர் நிலவு தருவாயெனக் குதூகலித்து நாமிருக்க நீயோ
மூன்றாம் பிறை ஆகிவிட்டாய்.
சாரணிய நெறி நின்றாய் சகிகட்டத்திலே மக்களுக்கு
உதவிக் கரம் நீட்டி உட்சென்ற வேளைதனில்
பாசக் கயிறெறிந்து பற்றினரே பரமனுக்காய்
பரமரர்தாம் நாமிங்கு அறிவோமோ பரமன் திட்டம்.

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, தம்பியர்,
உறவினர்கள், நண்பர்கள்.

வடக்கு. தெற்கு,
வீட்டுக்கோட்டை. (27187)

3ஆம் ஆண்டு நினைவலைகள்

கோபாலபிள்ளை இராசப்பா செல்வி இராசப்பா சித்திரா (B. Sc.)

(14, அன்னசத்திர லேன், யாழ்ப்பாணம்.)

தோற்றம்: 11 — 12 — 1930 மறைவு: 09 - 09 — 1990

தோற்றம்: 13 — 04 — 1968 மறைவு: 08 — 09 — 1990

சித்தி!

வாட்டமில்லா உன் வதனமதை ஏக்கத்துடன் தேடுகின்றேன்
நெஞ்சை விட்டு நீங்காத தோழியே எனைவிட்டு நீண்ட தூரம் சென்றதேனோ!
தனிவழி நீ செல்ல விரும்பாமல் தந்தையையும் அழைத்துச் சென்றாயோ!

உன் நினைவால் வாடும்:
தோழி
சர: கீதாஞ்சலி.

வேலணை தெற்கு.
வேலணை. (8487)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

புதிய மொந்தையில் பழைய கள்ளே!

கூட்டுப்படைகள் நடவடிக்கைக் கட்டளையகம் கலைக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாகப் புதிதாகப் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு என்ற புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

புதிய பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு அதிகாரம் மிக்க உயர்நிலை அமைப்பாக விளங்கும் என்றும், வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய இராணுவ நடவடிக்கைகளை திட்டமிடுவதுடன் அவற்றை செயலாக்கும் பொறுப்பும் அதனிடமே இருக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது. [படைத் தளபதிகளுக்கு முன்னரைவிட பரந்த அதிகாரங்கள் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

கூட்டுப்படைகள் நடவடிக்கைக் கட்டளையகம் ஒரு நிரந்தரமான அமைப்பாக இருந்ததில்லை. போர் தொடங்கிய பின்னர் உருவாக்கப்பட்ட பிரஸ்தாப கட்டளையகம் இடை நடுவில் கலைக்கப்பட்டுப் பின்னர் மீள உருவாக்கப்பட்டு இப்போது மடிந்து போயுள்ளது.

ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு விடுதலைப் புலிகளின் கையால் தோல்விகள் ஏற்படும் போதெல்லாம் அரச பாதுகாப்பு அமைப்புகளில் மாற்றங்கள் செய்யப்படுவது ஒன்றும் புதிதல்ல. ஆனால் அவ்வாறு அடிக்கடி பல மாற்றங்களைச் செய்த போதிலும் 39 மாதங்களாகப் போர் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தலையணையை மாற்றினால் தலையிடி மாறிவிடும் என்ற நினைப்புடன் கடந்த மூன்றே கால் வருடங்களில் அரசாங்கம் தனது இராணுவ அமைச்சின் கட்டமைப்பு அதிகார, செயற்பாட்டு வடிவங்களில் எத்தனையோ மாற்றங்களைச் செய்து பார்த்துவிட்டது. அந்த மாற்றங்கள் அரசாங்கம் எதிர்பார்த்த விளைவைக் கொடுக்கவில்லை. அதாவது வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளை வென்று இராணுவ ரீதியாக மேலோங்கி நின்று மேலாண்மை புரியமுடியவில்லை.

அத்தகைய பின்னணியில் திங்கட்கிழமை தோற்றுவிக்கப்பட்ட மாற்றமும் இராணுவ மேலாண்மையை எய்துவதனைக் குறிக்கோளாகக் கொண்டதேயாகும். பெயர் மாறியிருக்கிறது வடிவம் மாறியிருக்கிறது. ஆனால் செயற்பாடு ஒன்றாகவே இருக்கப் போகிறது. அதாவது வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதனை ஒருங்கிணைப்பது என்பதாகும். மேலும் ஆள் மாற்றமும் பெரிதாக நடக்கவில்லை. பழைய தலைகளே மீண்டும் வடக்கு—கிழக்கு மீதான போரைக் கையாளப்போகின்றன. புதிய மொந்தையில் ஊற்றப்பட்டிருப்பது பழைய கள்ளே!

எனவே இந்தப் புதிய மாற்றம் மந்திரத்தால் மாங்காய் விழ்த்துச் சக்தி கொண்டதாகக் கருதுவதற்கு எதுவுமில்லை. ஆனால் வடக்கு மீதான ஒரு பெரும் தாக்குதலை முன்னெடுக்கும் செயற்பாட்டில் தயக்கமின்றி ஈடுபடும் வாய்ப்பு உண்டு.

வடக்கின் மீதான பெரிய தாக்குதல் என்பது இன்று நேற்று பிரஸ்தாபிக்கப்படுவதல்ல இடைவெளி விட்டு விட்டு இதோ பெரிய தாக்குதல், அதோ பெரிய தாக்குதல் என்று எத்தனையோ தடவைகள் உருப்போடப்பட்டு வரும் ஒன்றாகும். புதிய பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு அதனைச் செயற்படுத்துவதில் முனைப்புடன் பணிபுரியலாம், அவ்வளவுதான்.

குடாநாட்டின் மீதான பெரும் தாக்குதலானது பாரிய மக்கள் அழிவை உண்டாக்கும் என்பதைப் பொருட்படுத்தாமல் புதிய உசாருடனும், துடிப்புடனும், வேகமாகவும், தயக்கமின்றியும் அது செயலில் இறங்கக்கூடும்.

அரசாங்கம் அரசியல் தீர்வு வழியை மறந்து இராணுவ வழியையே தீர்க்கமாகத் தெரிவு செய்து இறுதிப் போருக்குத் தயாராகிறது என்பதே உண்மை. இதனை உணரவேண்டியவர்களும், தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களும் உலகத்தினரே. தமிழர்கள் இறுதிப் போரை எதிர்கொள்ளத் தயாராவதுடன் தமக்கான பாதுகாப்பை பலப்படுத்துவதையுமே செய்யலாம்; செய்யவேண்டும்.

யாழ். சித்த வைத்தியத்துறை பிரச்சினைக்கு 14இல் முடிவு

கொழும்பு, செப். 8

யாழ். சித்த வைத்தியத் துறை மாணவர்கள் பிரச்சினைக்கு இம்மாதம் 14 ஆம் திகதி நடைபெறும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

கடந்த வியாழக்கிழமை பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் அர்ஜுனா அலுவிகாரையை யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி க.பவானியும் சித்த மருத்துவ மாணவர் மன்றத்தின் பிரதிநிதிகள் நால்வரும் கொழும்பில் சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

அப்போதே 14 ஆம் திகதி நடைபெற உள்ள பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுக் கூட்டத்தில் இது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும்—

அதுவரை மாணவர்கள் தமது சத்தியாக்கிரகபோராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்றும்— பேராசிரியர் அர்ஜுனா அலுவிகாரை தெரிவித்தார்.

சித்த மருத்துவத் துறை தனி நிறுவகமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை சித்த மருத்துவ மாணவர் மன்றம் முன் வைத்து போராட்டம் நடத்தி வருவது தெரிந்ததே.

கடந்த வியாழக்கிழமை பேராசிரியர் அர்ஜுனா அலுவிகாரையுடன் நடத்த சந்திப்பின்போது சித்த மருத்துவத் துறை தனி நிறுவகமாக்கப்பட வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக பேரவை 1991 ஆண்டில் ஆணைக்குழுவிற்குக் கோரிக்கை அனுப்பி இருந்தது என்றும்—

பின்னர் 1992 இல் கலைப்பீடத்தினின்றும் பிரிந்து, தனியாக ஒரு சபையின் கீழோ அல்லது துணைவேந்தரின் கீழோ இயங்க வேண்டும் என்று சித்த மருத்துவத்துறை தீர்மானித்தது என்றும்— இந்தச் சந்திப்பின் போது பேராசிரியர் அர்ஜுனா அலுவிகாரையிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குரிய ஆவணங்களும் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டன. (இ)

பணம் சம்பாதிப்பதற்காக வேண்டுமென்றே

அரசிலும் படையிலும் சிலர் போரை இழுத்தடிக்கின்றனர்

சபாநாயகர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 8

பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் மற்றும் பாதுகாப்புப் படைகளில் உள்ள சிலர் வடக்கு—கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வராமல் வேண்டும் என்றே நீடித்துக் கொண்டு போவதாக நமக்கு தகவல் கிடைத்திருப்பதாக சபாநாயகர் எம். எச். முகமது கூறி இருக்கிறார்.

இச் செய்தியை வங்காதீப தனது 2-9-98 இதழில் வெளியிட்டிருக்கிறது.

சபாநாயகரின் இந்தக் குற்றச்சாட்டு குறித்து அரசாங்கம் விசாரணை நடத்தி மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும் சிங்கள பாதுகாப்புச் சங்கத் தலைவருமான காமினி ஜயசூரியா பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

"சபாநாயகரின் குற்றச்சாட்டு உண்மையானால், அது திகிலாவதத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பூரண ஆதரவளித்து வரும் மக்களுக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகும்.

சபாநாயகரின் குற்றச்சாட்டு மராதூரமானது. இக்குற்றச்சாட்டுக்கு அரசும் பாதுகாப்புப் படையினரும் பதிலளிக்க வேண்டும்.

குற்றச்சாட்டு உண்மையற்றதாக இருந்து, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாத அளவுக்கு அரசுக்கும் படையினருக்கும் வேறு முட்டுக்கட்டைகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை அறிந்து கொள்ளும் உரிமை பொது மக்களுக்கு உண்டு

—இவ்வாறு திரு. ஜயசூரியா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-எ)

மட்டு - வவுனியா புதிய பஸ் சேவை

மட்டக்களப்பு — வவுனியா புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தினமும் காலை 7 மணிக்கு மட்டு நகரில் இருந்து இந்த பஸ் புறப்படும். அதேபோல தினமும் காலை 7 மணிக்கு வவுனியாவில் இருந்தும் மட்டக்களப்பு நோக்கி பஸ் புறப்படும்.

மட்டக்களப்பு மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து டிப்போ இச் சேவையை ஆரம்பித்திருக்கிறது. (ஒ)

அப்பியாச கொப்பிகள்

யாழ்ப்பாணம், செப். 8

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகளை அதிபர்கள் நேரடியாகக் கல்வித் திணைக்களத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. குறைந்தளவு அப்பியாசக் கொப்பிகளே கையிருப்பில் இருப்பதால் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், செ. 8

நரோமா பயணிகள் கப்பல் சேவை மீண்டும் இம் மாதம் 14, 21, 28 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் 20 பயணிகள் வீதம் காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இக் கப்பலில் செல்லலாம்

நரோமாவில் பயணம் செய்வதற்கு தங்கள் பெயர்களைப் பதிவு செய்தவர்கள் இன்று காலை அரச அதிபரின் அலுவலகத்தில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஒ)

புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளைப் பலப்படுத்த போதுமான நிதி உதவி அளிக்குமாறு தமிழக அரசு விடுத்த வேண்டுகோளுக்கு மத்திய அரசு செவி சாய்க்கவில்லை என்றும் தெரிவித்தார்.

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை விரைந்து அவர்களின் தாயகத்துக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை பூரணமாகச் செயற்படுத்த மத்திய அரசு முன்வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-எ)

தமிழரின் உறுதி நீடிக்கவேண்டும்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கு அனுகூலமாக இருக்குமா?

தொண்டமான்:- இவைகளின் மூலம் ஏதாவது நடக்கும் என எதிர்பார்க்க முடியாது. கடந்த காலங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் நடைபெற்றும் இறுதியில் ஒன்றும் நடைபெறவில்லை. எல்லாம் ஒரு தற்காலிக சம்பவங்களாகவே போய்விட்டன. அனுப்பப்படும் உணவு மக்களைச் சென்றடையக்கூடாது என்றில்லை. போராடுகின்றவர்களைச் சென்றடையக்கூடாது என நினைத்தே நடவடிக்கை எடுப்பதாக அரசு கூறுகின்றது.

ஆனால் இந்தப் போராட்டத்தில் மக்களை நியாக உணர்வுடன் உறுதியாக இருக்கின்றனர். போராடுபவர்களும் உறுதியாக இருக்கின்றனர். இந்த உறுதிப்பாட்டைக் குலைக்க முடியாது. என்ற நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படவேண்டும். அத்துடன் தாம் எவ்வளவுதான் உபத்திரவக் கொடுத்தாலும் அதற்கு தமிழ் மக்கள் ஈடுகொடுத்து நிற்கின்றனர் என்று அரசாங்கமும், இராணுவமும் உணர்வதன் மூலமே இந்தப் பிரச்சினைக்கு முடிவு வரும்.

கேள்வி:- இந்த விடயத்தில் அரசு மக்களைப் புறக்கணிக்க இயலுமா? புலிப்படையினர், இராணுவத்தினர் ஆகிய இரு பகுதியினருமே ஆயுதபாணிகள். ஆயுதபாணிகளான இரு குழுக்கள் சண்டையிடுகின்றன இதில் மக்கள் பாதிக்கப்படவேண்டுமா.

தொண்டா:- அரசாங்கத்தைப் பொறுத்தவரை போராட்டத்தில் வெற்றி பெறவேண்டும் என்பதைத் தான் எதிர்பார்க்கின்றது. இது சாத்தியமா இல்லையா என்பதை தமிழர்கள்தான் தீர்மானிக்கவேண்டும். தமிழ்த் தலைவர்களான நாகநாதன் போன்றோர் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்ய முனைந்தபோது அடித்து விரட்டப்பட்டனர். ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை. இவ்வளவு அழிவுகள், சேதங்கள் உயிரிழப்புகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்களும் சரி, விடுதலைப் புலிகளும் சரி உறுதி குலையாமல் இருக்கின்றனர். இந்த உறுதிப்பாடு நீடிப்பதன் மூலமே அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

கேள்வி:- தேர்தலை நடத்துவதன்மூலம் ஜனநாயகத்தை மீளக்கொண்டு வரலாம் என்று கூறப்படுவது பற்றி தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

தொண்டா:- ஜனநாயகத்தைக் கொண்டு வருவதற்கு முதலில் வடக்கு, கிழக்கில் அமைதி நிலவவேண்டும். இந்த அமைதியை இரு பகுதியினராக்தான் கொண்டுவர முடியும். ஒன்று புலிப்படையினர் இரண்டாவது அரசாங்கம். இவ்விருபகுதியினரதும் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படாத எந்த முடிவும் நடைமுறைப்படுத்தப்படமுடியாது.

கேள்வி:- இடைக்கால சபை அமைப்பது பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

தொண்டா:- யார் அமைப்பது? அரசாங்கம், புலிப்படை ஆகிய இரு பகுதியினரைத் தவிர்த்து வேறு யாரும் எவ்வாறானமுடிவை மேற்கொண்டாலும் அது நடைமுறைக்கு வராது. அப்படி வந்தாக்கூட அது பாதகமாகவே அமையும்.

கேள்வி:- தாங்கள் முன் வைத்துச் செல்லும் சமாதான முயற்சி அரசாங்கத்தின் முன் முயற்சியாகக் கருதலாமா அல்லது அரசாங்கத்திலிருந்து வேறுபட்ட ஒரு சுதந்திரமான முயற்சி எனக் கருதவேண்டுமா?

தொண்டா:- எனது இந்த முயற்சிக்கும் அரசாங்கத்திற்கும் சரிபற்றும் இல்லை. அதே வேளையில் நான் அரசாங்கத்தின் அமைச்சர் என்ற முறையில் அல்ல, தமிழன், தமிழ்த் தலைவன் என்றவகையிலேயே இந்த முயற்சியில் இறங்கியுள்ளேன்.

ஜனாதிபதியுடன் பேசிய பின்னரே யாழ்ப்பாணம்

"சண்டே ஐலண்ட்" இதழுக்கான பேட்டியில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்த தகவல்களில் —

★ ஜனாதிபதி விஜேதுங்கா மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோருடன் நான் நடத்தும் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளிலேயே நான் யாழ்ப்பாணத்துக்குப் போனது தங்கியுள்ளது.

★ தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடைபெறும் பட்சத்தில் அதில் சாதகமான முடிவு வரும் வரை இருதரப்பினரும் தமது சொந்த நடவடிக்கைகளை மேற்கொள்வர். ஆனால் பேச்சுக்களில் ஏதாவது இடமான நிலை ஏற்படுமிடத்து நிலைவரத்தில் மாற்றம் ஏற்படும் — என்று குறிப்பிட்டுள்ளார்.

"சண்டே ஐலண்ட்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் —

★ லண்டனில் நான் தமிழர் கட்சிகளை விமர்சிக்கவில்லை. பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியவர்கள் அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் தான் என்று நான் கூறினேன். ஏனைய குழுக்களால் தீர்வு எதனையும் தந்துவிட முடியாது. இது காலவரை அவர்கள் என்ன செய்துள்ளார்கள்?

★ யுத்தத்தைத் தொடருவதா அல்லது நிறுத்துவதா என்பதனைத் தீர்மானிக்கக் கூடிய ஒரே கட்சி விடுதலைப் புலிகள் இயக்கம் தான். ஆகவே நான் கூறுவது தமிழ் அரசியல் கட்சிகள் தங்களின் வேறுபாடுகளை, தமிழ் மக்களின் நன்மை கருதி, மறந்து யுத்தத்தை நிறுத்தும்படி விடுதலைப் புலிகளிடம் கேட்டுக் கொள்ள வேண்டும் — என்று அமைச்சர் கூறியுள்ளார். (அ-எ-5)

கிளாலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டநேரம் கடந்த பகுதியை வட்டமிட்ட பின்னர் - கடந்த பகுதியில் ரொக்கெட் மற்றும் கனரக தாக்குதல்களை நடத்தியது:

இரவு 9. 45 மணியளவில் பூநகரி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கிளாலி பண்டிதர் குடியிருப்புப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

ஆலங்கேணிப் பகுதியிலும் நேற்று முன்தினம் இரவு விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன;

இதன்பின்னர்—

நேற்றுக் காலை 10-30 மணியளவில் கிளாலிக் கடற்பகுதியில் நின்ற படகுகளை நோக்கி ஹெலியிலிருந்து 50 [illegible] (உ-த-117-75-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தபால் விநியோகம்

"குமாரி" கப்பலில் எடுத்து வரப்பட்ட 176பொதிதபாலும் இன்று முதல் உரியக் விலாசங்களில் ஒப்படைக்கப் படவிருக்கின்றன.

(உ-109-178-17)

மீனவர் காயம்

மன்னார் மாவட்டத்தில் கடந்த வாரம் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிச் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் காயமுற்றார். (உ-த)

புதிய செயலாளர்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) புதிய செயலாளர் நாயகமாக எம் கோ சிவாஜிலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை செயலாளர் நாயகமாக பணியாற்றிய கே. கருணாகரனின் இடத்திற்கு கட்சியின் செயற்குழு இவரை தெரிவு செய்துள்ளது, தேர்தல் ஆணையாளர் இவரது தெரிவை ஏற்றுக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சிங்கள பத்திரிகை

"தினமுரசு" என்ற பெயரில் தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றை கொழும்பிலிருந்து வெளியிட்டு வரும் ஈ.பி.டி.பி. குழுவினர் இம்மாதம் முதல் "துபத்ர" [தீவு] என்றபெயரில் மாத மிருமுறை பிரசுரமாகும் சிங்களப் பத்திரிகை ஒன்றை [வெளியிடவுள்ளனர். "ராவய" சிங்கள வார இதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது. (உ-6)

தகர்க்கப்பட்ட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளும், விமர்சகர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

போராளிகளுக்கு ஆயுதங்கள் வருவதை தடை செய்ய வேண்டும் என்றால் பலம் வாய்ந்த நவீன ஆயுதங்கள் கொண்ட கடற்படையை உருவாக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

எமது நேற்றைய வெளியீடுகள்

சூப்பர்ஸ்ரார் ரஜனிகாந்தின்
ப்ரியராமன் - சஞ்சய் நடிக்கும்

★ **வள்ளி** [ஒறிஜினல்]

இளையதிலகம் பிரபு - குஷ்பு

★ **மறவன்** [ஒறிஜினல்]

சுப்பஸோ வீடியோ ஒடியோ சென்ரர்

198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5898)

மரண அறிவித்தல்கள்

திருமதி லோகேஸ்வரன் ஜெயக்குமாரி

காரைநகர் களபூமியைச் சேர்ந்த இளைப்பாறிய வைத்திய அதிகாரி ஆறுமுகம் சோமசுந்தரம் — செல்லம்மா தம்பதிகளின் புதல்வி திருமதி லோகேஸ்வரன் ஜெயக்குமாரி கடந்த 4 ஆம் திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் தம்பையா லோகேஸ்வரன் (கனடா) அவர்களின் அன்பு மனைவியும், நிலேஷ்குமாரி (கனடா) அபிநகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரகுமாரி, பாலேந்திரன் (கனடா), சுரேந்திரன், ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் சகோதரியும், க. இரத்தினராஜா (கோபால்), திருமதி பா. சந்திரகுமாரி, திருமதி சு. சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனியும், சாந்தி, சர்மிளா ஆகியோரின் சித்தியும், ஜனனி, தர்சினா, மயூரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோமசுந்தரம் சுரேந்திரன்
(அன்னன்)
இரத்தினராசா சந்திரகுமாரி
2, சோமசுந்தரம் ஒழுங்கை, [அக்கா]
சண்டுகுளி. (27228)

செல்லத்துரை வைத்தியநாதன் (ஆஸ்திரேலியா)

111, பூதவராயர் வீதி, திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை - தங்கம்மா தம்பதிகளின் புதல்வன் செல்லத்துரை வைத்தியநாதன் அவர்கள் ஆஸ்திரேலியாவில் 5-9-93 இல் காலமானார்.

இவர் ஜோதியின் அன்புக் கணவரும், றம்மியா, குமரன், சரவணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலசிங்கம், காலஞ்சென்ற செல்வநாயகி, இராஜரட்னம் (இங்கிலாந்து), சோதிமலர், நாகேஸ்வரி, இராஜசிங்கம் (கனடா), குலசிங்கம் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் 6-9-93 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. செல்லத்துரை
(தகப்பனார்)

(27217)

சிவகுரு விஸ்வலிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுரு விஸ்வலிங்கம் நேற்றுக் (07-09-93) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், கிருஷ்ணகோபாலனின் அன்புத் தகப்பனும் சரோஜாவின் மாமனாரும், கிரிஜா, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் செம்மணி மயானத்தில் இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கிருஷ்ணகோபால்
(மகன்)
20, செம்மணி வீதி.
நல்லூர். (சி / 5897)

அப்பாமுத்துப்பிள்ளை சிவராமலிங்கம்

[ஓய்வுபெற்ற கட்டடத்திணைக்கள பிரதம இலிகிதர்]

கைதடி வடக்கைச் சேர்ந்த அ. சிவராமலிங்கம் கடந்த ஞாயிறு அன்று (05-09-93) காலமாகிவிட்டார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை — வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மனோன் பெர்னாண்டோ மனவராயர் சின்னத்தம்பி, திருமதி சின்னத்தம்பி ஆகியோரின் மருமகனும், தயாளினி (ஆசிரியை ஹற்றன்), தயாருபன் (சவுதி), லதாளினி (கொழும்பு), அருட்செல்வன் (கனடா), தயாபரன், பிரபாகரன் (சுவிஸ்), கதாகரன் (பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கராசா (டுபாய்), நாகவதனி (ஹற்றன் நஷனல் வங்கி கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் மிருதுஷாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2-00 மணி அளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாத்தள மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அ. கப்பிரமணியம்
(சகோதரன்)
"ஞானவீதான்"
கைதடி வடக்கு,
கைதடி. (27222)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் பிரைவேட் லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 472/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08-09-1993 இல் அச்சிடப்பெற்றது.

ஐ.தே.க. - ஐ.ஐ.தே. முன்னணி இணைப்பு முயற்சிகள் இழுபறி

ஜனாதிபதியின் முன்னைய நிலைப்பாட்டில் மாற்றம்

கொழும்பு, செப். 8

காமினி திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஐ. தே. கவில் இணைப்பது தொடர்பாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கொண்டிருந்த நிலைப்பாட்டில் தற்போது மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக, இந்த விவகாரம் தற்போது இழுபறி நிலையில் இருப்பதாக பெயர் குறிப்பிடாத அமைச்சர் ஒருவரை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும், அரசாங்க நாடாளுமன்றக் குழுவும், அமைச்சரவையும் தற்போது பிளவு எதுவும் இன்றி செயற்பட்டுவருவதாக காமினி திஸநாயக்காவைச் சேர்ப்பது மூலம் அரசாங்கத்தில் பிளவு ஏற்படலாம் என்று ஜனாதிபதி அஞ்சுகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் காமினி திஸநாயக்காவையும் அவரது குழுவினரையும் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வருவதற்காக தமது எம். பி பதவியை விட்டுக் கொடுக்க ஐ. தே. க. வுக்குள் எவரும் தயாராக இல்லை என்றும் கூறப்படுகிறது.

காமினி திஸநாயக்கா தமது கட்சியைக் கலைத்துவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வாரா, அல்லது தொண்டமானின் இ. தொ. கா. போன்று அரசுடன் இணைந்து செயற்படலாம். ஆனால் எவருமே அமைச்சர் பதவியை எதிர்பார்க்க முடியாது. — இதுவே ஜனாதிபதியின் தற்போதைய நிலைப்பாடு என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி — ஐ. தே. க. இணைப்பு குறித்து ஜனாதிபதியுடன் தாம் இரண்டு மூன்று தடவைகள் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை என்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் காமினி திஸநாயக்கா தெரிவித்திருந்தார். (இ)

ஆலயங்களில்

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறும். (உ-161-15-28)

° ° °

உடுவில் மகளிர் கல்லூரி ஞானவைரவர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கிருஷ்ணபவானுக்கு இன்று புதன்கிழமை ஜெயந்தி விழா நடைபெறும். (உ 68)

° ° °

ஆனைக்கோட்டை உயரிப்பிலம் புனித அடைக்கல நாயகி திருநாள் கொண்டாடும் இன்று புதன்கிழமை நடைபெறும். (உ-161)

° ° °

மயிலங்கூடல் அருள்மிகு ஞான வைரவர் ஆலய முதல் கும்பாபிஷேக தின விழா இன்று உரும்பராய் ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறும். (ந)

இந்திய - சீன ஒப்பந்தம்

பீஜிங்கில், செப். 8

இந்தியாவும் சீனாவும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஒன்றில் நேற்று கைச்சாத்திட்டன.

இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவும், சீனப் பிரதமர் லீ பங்கும் சீனத் தலைநகரில் நேற்று இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (உ-த)

ராணிப்பேட்டை தேர்தல்

சென்னை, செப். 8

ராணிப்பேட்டைசட்டசபை இடைத்தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணும் வேலை இம்மாதம் 23ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இடைத்தேர்தல் இம்மாதம் 20ஆம் திகதி நடைபெறவிருப்பது தெரிந்ததே. (ஒ-எ)

விளையாட்டு நிகழ்வுகள்

புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டத்தில் விதாயார் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதும். [உ-20]

° ° °

காரைநகர் நோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3-30 மணி:- கலைவாணி "ஏ" அணி எதிர் சத்தியா "ஏ" அணி

★ 4-30 மணி:- அன்னா "பி" அணி எதிர் விக்தா அணி

° ° °

"சென் அன்ரனீஸ்" கேடயத்துக்காக மாவையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதிச் சுற்று ஆட்டம் ஒன்றில் [illegible] பாடும்மீன் அணியை எதிர்த்து சென். நிக்கலஸ் அணி மோதவிருக்கிறது.

JAFFNA COLLEGE CEYLON 1823 1873

யாழ்ப்பாணக்கல்லூரி
வட்டுக்கோட்டை

பிரவேசம்-1994

1. பின்வரும் வகுப்புகளில் மட்டும் வெற்றிடங்கள் உண்டு.

ஆண்டு ஒன்று,
ஆண்டு ஆறு

2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள்: 15-10-1993

அ. விண்ணப்பப்படிவங்களை 09-09-1993 முதல் 14-10-1993 வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் [போட்டோ பிரதி] இணைக்கப்பட வேண்டும். பிழையான அல்லது பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. விண்ணப்பப்படிவங்களை சனி, ஞாயிறு விடுமுறை நீங்கலாக ஏனைய நாட்களில் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை கல்லூரியில் படிவமொன்றிற்கு ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வயதெல்லைகள்:

அ. ஆண்டு 1: விண்ணப்பதாரி 01-01-1988 க்கும் 31-01-1989க்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.

ஆ. ஆண்டு 6: விண்ணப்பதாரி 01-01-1983இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

5. பிரவேசப் பரீட்சை:

அ. ஆண்டு ஒன்றுக்கான தேர்முகப் பரீட்சை 06-11-1993 காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆ. ஆண்டு ஆறு வகுப்புக்கு 30-10-1993 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும். கணிதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் எழுத்துப் பரீட்சை நடைபெறும்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

[சி-5895]

மரண அறிவித்தல்

திருமதி மாணிக்கரத்தினம் சரவணமுத்து

வயாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மாணிக்கரத்தினம் சரவணமுத்து 05-09-93 அன்று லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சரவணமுத்து (தபாலதிபர் வயாவிளான்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி செல்லாச்சிப்பிள்ளை கனகதிப்பிள்ளை, சிவபாக்கியம் சீனிவாசம் ஆகியோரின் பிரியமான சகோதரியும் திருமதி குணமணி கதிரவேலு (கொழும்பு), திரு. அம்பிகைபாகன் (ஜேர்மனி), திரு. விவேகானந்தன் குடியேற்ற அலுவலர், தெகிவிப்பனை), திருமதி தமயந்தி சண்முகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. கதிரவேலு (நாடாளுமன்ற அலுவலர், கொழும்பு), திருமதி இரத்தினமணி (அச்சுவேலி), திருமதி புனிதவதி (உரும்பராய்), திரு. சண்முகநாதன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திரு. குருபரன் (லண்டன்), திருமதி இந்திராதேவி (வைத்திய கலாநிதி, கொழும்பு), மகேசுதா, ஆகவ்யா, ஆதவன், யாழினி, துஷ்யந்தி, துஷ்யந்தன் (லண்டன்), கௌதமன், சாமினா (லண்டன்), தாரா, (லண்டன்) ஆகியோரின் அன்பான பேரத்தியும், ஷெரிகா (லண்டன்) வின் அன்புப் பூட்டியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்
ச. விவேகானந்தன்

அன்பகம்
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
பலாலி வீதி,
உரும்பராய். (27224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org